(முற்பகல் 9-50)

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் உள்ள உசிலம்பட்டி குடிநீர் திட்டம் முன்னேற்றத்தில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் தற்போது எந்த அளவில் அது முன்னேற்றம் அடைந்துள்ளது? எந்த அளவிற்குப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன? இந்த 1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடித்துக்கொடுக்கப்படுமா, அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு? இதுபோன்று மதுரை மாவட்டத்தில் வேறு குடிநீர் திட்டங்கள் இப்போது செயல்பட்டு வருகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரே துணை வினாவில் மாவட்ட முழுவதிலும் உள்ள திட்டங்கள் பற்றி கேள்விகள் கேட்பது சரியல்ல; ஒரு துணை வினாவில் பல கேள்விகள் கேட்பதும் சரியல்ல.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே' உசிலம்பட்டி குடிநீர் திட்ட மதிப்பீடு ரூ. 56.75 லட்சமாகும். உத்தரவிட்ட தேதி 23-1-1980. வேலை ஆரம்பிக்கப்பட்ட தேதி மார்ச் 1981. இப்போது வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன தலைமைப் பணியிடத்தில் இருந்து 3 வடி கிணறு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. 4 லட்சம் லிட்டர் வட்டக் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானப் பணிகள், நீர் கொண்டு செல்லும் குழாய் பதிக்கும் பணி ஆகியவை முன்னேற்றத்தில் உள்ளன

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, உசிலம்பட்டி போன்ற திட்டங்களுக்கு தண்ணீர் கொண்டு போகும் போது 2-3 கிலோமீட்டர் தூரம் தண்ணீர் கொண்டு செல்கிறபோது, வழியில் உள்ள கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தினால் தண்ணீர் கொடுப்பதற்கு அரசு திட்டம் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திலே கூட 16 வழியோர கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படும்.

காட்பாடி தொகுதியிலுள்ள இராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 114—திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி கே. வி. குப்பம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இராஜாதோப்பில் அணை கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் உத்தேச மதிப்பீடு எவ்வளவு?

(இ) வேலை எப்போது துவங்கும்?

1983 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ) & (இ) வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டம் இராஜாதோப்பில் ஓர் அணைக் கட்டும் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டிலிருந்து இந்த அணை கட்டுவதைப் பற்றி தொடர்ந்து பல உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நான் மட்டுமே 3 முறை இந்தக் கேள்வியைக் கேட்டு இருக்கிறேன். இந்த அணை கட்டுவதன் மூலம் 40 கிராமங்களுக்கு நீர்பாசனம் கிடைக்கும். அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் பெருகவும் வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இந்த நடப்பு ஆண்டிலேயே அதை எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பாலாறு பகுதியில் ஏற்கனவே நீர்வளத்தை நாம் நன்றாகப் பயன்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்திற்கான நீர் வரத்துக்கள் குறித்து 1980 ஆம் ஆண்டு முதல் எடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். மூன்றாவது ஆண்டு ஆய்வு இந்த ஆண்டு முடிக்கப்படும். அந்த ஆய்வுகள் முடிக்கப்பட்ட பிறகு இதைப்பற்றி அரசு பரிசிலிக்கும். இந்த 1983 ஆம் ஆண்டுக் குள்ளேயே அதைப் பரிசிலித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே அந்த அணைக்கட்டுப் பகுதியிலிருந்து வருகின்ற தண்ணீர் பெரும்பாலும் பாலாற்றுக்குச் செல்வது இல்லை. மலைப்பகுதியில் இருந்து தொடங்கி தனியாக நிலப்பகுதியைக் கடந்து சென்று விடும் சூழ்நிலை இருப்பதால், அந்த மலைத்தொடரிலேயே நீர்த்தேக்கத்தைக் கட்டினால், நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கு வசதியாக இருக்கும். பாசனத்திற்கு பயன் உள்ளதாக இருக்கும். ஆகவே, அந்த அணையைக் கட்டிதருவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா? இந்த ஆண்டே அதைச் செய்துதர முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இறுதிக்குள் அரசு அதைப்பற்றி ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வரும்.

திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருக்கிறது, 3 ஆண்டுகள் தண்ணீர் வரத்து கணக்கு எடுக்கப்படுகிறது, 3-வது ஆண்டு, கடைசியாக கணக்கு எடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இதற்காக திட்டம் போடப்பட்டு இருக்கிறதா? அதற்கான மதிப்பீடு அளவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன். அது ஒரு வறட்சியான பகுதி என்பதால் அதை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே 24·75 லட்சம் மதிப்பீட்டில் பாசனத்துறை தலைமைப் பொறியாளர் அரசுக்கு திட்டம் அனுப்பியுள்ளார். நீர் வரத்து 3 ஆண்டுகாலம் கணக்கெடுக்கப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதால், நில வரத்து குறித்து வருவாய் வாரியம் கணக்கெடுத்து வருகிறது. இரண்டாண்டு நீர் வரத்து கணக்குகள் எடுக்கப்பட்டு விட்டன. இந்த ஆண்டு 3-வது ஆண்டு நீர் வரத்து கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அது எடுக்கப்பட்டு முடிந்தபின், அதனை ஆய்வு செய்து, அதற்குப் பிறகு அரசு முடிவு செய்யும். நீர் வரத்து கணக்கு ஆய்வு செய்யப்பட்டபின் முடிவு செய்யவேண்டுமென்று இருக்கின்ற காரணத்தால், இந்த மூன்றாவது ஆண்டு கணக்கு எடுக்கப்பட்டு முடிந்தவுடன், இந்த ஆண்டு இறுதிக்குள் நிச்சயமாக அரசு ஒரு நல்ல முடிவை மேற்கொள்ளும்.

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தினால் பயன்பெறும் நிலங்கள்.

* வினா எண் 115—திரு ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தினால் எவ்வளவு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளது?

(அ) வரிச்சூர் குன்னத்தூர் கண்மாய் நிலங்களும் இந்த திட்டத்தில் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) 25,463 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி அளிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

(ஆ) ஏற்கனவே பெரியாறு வைகை பாசனத்தில் உள்ள வரிச்சூர் மற்றும் குன்னத்தூர் கண்மாய் நிலங்கள் இந்த திட்டத்தினால் பயன்பெறும்.

திரு. ஏ. பாலுச்சாமி: தலைவரவர்களே, இந்த 25,000 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்க எவ்வளவு செலவாகும்? மேலும் கூடுதலாக நிலங்களைச் சேர்த்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இறுதியாக இந்தத் திட்டத்தை உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் மதிப்பிட்டு, 44·50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜூலை 1981 ஆம் ஆண்டு நிர்வாக ஒப்புதலோடு இந்தத் திட்டம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன. இதற்குப் பின்னால் விடுபட்டுப்போன பல பகுதி